

சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் ஜாபர்கான்பேட்டை 139வது வட்டத்தில் கெங்கையம்மன் கோவில் அருகில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன், தலைமையில், பகுதி செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் கலைஞர் திருவுருவ சிலைக்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்தார். பாலவாக்கம் மு. மனோகரன், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், மின்னல் கந்தப்பன், எம்.எஸ். ஹரிபாபு, சைதை சாதிக், டி.என் சிறுவமணி, த.சம்பத், வி.பி. ஜானகிராமன், சைமு. சேகர், அட்கோ கமலநாதன், ந.தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம். நாகா, ஆர். கிருஷ்ணகுமார், ந.மணிகண்டன், ஜி.கே.ராமச்சந்திரன், வி.மதிவாணன், த.மணி, மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எல் முருகன், அ.அயத் பாஷா, இ.வரதன், மா. ஏழுமலை, பூபதி வெங்கடேசன், பி.எஸ். பிரகாஷ், சுமதி தீனதயாளன், சி.டி. காசிநாதன், து.முரளி, முகமது அலி, எம்.அருண், மு.காளியப்பன், வி.பி. சிவகுமார், ம. தீலிப்பன் மற்றும் ஏராள மானவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நன்றியுரை : பாபு எல்லப்பன். நிகழ்ச்சி ஏற்பாடு : களக்காடி எல்லப்பன்.



கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்,முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி 07.08.2026 காலை 8.00 மணிக்கு நடைபெற்றது.அமைதிப் பேரணியில் (தொ.மு.ச) சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் கருப்புச் சிவப்புச் சீருடையில் ஆயிரக்கணக்கானோர் முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ முன்னிலையில் கலந்து கொண்டனர்.உடன் தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ்,தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பிடிசி வெ.பாலு,மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கப் பொதுச் செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் ஆகியோர் உள்ளனர்

த.வெ.க.வின் அராஜக ஆட்சியில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைதினை கண்டித்து

# ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி கழகத்தினர் கண்டன ஆர்ப்பாட்டம்!

## பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக. 8-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி செயலாளரும் எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆளும் த.வெ.க. அராஜக அரசின் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டதை கண்டித்து சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை தலைமையில் 4.8.2026 செவ்வாய்க்கிழமை தேனாம்பேட்டை அண்ணா சாலை எல்டாம்ஸ் ரோடு சந்திப்பில் சாலை மறியல் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.





இந்த மாபெரும் சாலை மறியல் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ் பகுதி துணைச் செயலாளர் டி. வைலட்மேரி, வட்ட கழக செயலாளர் எப்.பீட்டர் ஜான், நுங்கை பா.மகேஷ், த.தேவராஜ், எம்.என். விஷ்ணு,எஸ். சத்திய பெருமாள், தேனா எல்.தவமணி, எஸ்.என்.கே.ராமன், கோ. யுவராஜ், மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் ஏ.கமலக்கண் ணன் கே.பி. வினோத் ஜே. சிவலிங்கம் டி.வேல்முருகன் ஜே.வரதன், ஏவி.இராமநாதன் மகளிர் அணி கே.பச்சையம்மாள், கே.ரேனுகா எம்.கீதா எஸ் கல்பனா, க.தேவி, என்.நாகலட்சுமி , நாகு எஸ் பரிமளா தேவி ஜி.அம்மு .கே.மலர் பி. ஜானகி, அப்பல்லோ ராமு பி.சந்திரபோஸ் குமரேசன் எஸ் சுரேஷ் விக்கி (எ) விக்னேஷ் தினேஷ் ஆர் லிங்கேசன் எம் சிவா பப்லு (எ) பிரபாகரன் எம் ஆறுமுகம் கழக கரிகாலன் நித்தியா அன்பு எஸ்.சங்கர், எம். பன்னீர்செல்வம், எம். சதீஷ்குமார்(எ) ஜின்னா ஆர்.டி.ஆர் சீனிவாசன் ஏ.ஆர்.மணி அப்துல்லாசா, ரா. மதிவாணன், எம்.என். அருண், மூ.ராமலிங்கம் அரிகிருஷ்ணன் ஜி.மணி மாறன் எ.துரைராஜ் வி. மோகன் தாஸ் காந்தி, வி.கிஷாந்த் ஆட்டோ மோகன், கே.செல்வராஜ், நா.அசோகன்,

டி.ராஜேந்திரன் என் சுமன், வி.ஆனந்தகுமார் கோபி அருண் பாலாஜி சுரேஷ் ரமேஷ் சூர்யா விஜயராகவன் தமிழ் (எ) தவசீலன் விஜயகுமார் ராகவா வி வினோத்குமார் பா.வினோத்குமார் வேலு மணி செந்தில் குமார் கே தியாகராஜன் வி. தீபன் சக்கரவர்த்தி எஸ். சேகர் வி சம்பத்குமார் எம்டி மணி பால் மோப்பு (எ) சுந்தரேசன் சரவணன் ஜி ரகு எஸ் சுரேந்தர் எஸ் பிரேம் டி.ஸ்டாலின் (எ) மணிமாறன் ராகேஷ் குமார் காமு(எ) காமராஜ் வீ.ஜான், டான் (எ) சரவணன் ஐயப்பன் சரவணன் டிங்கர் வேலு சதீஷ் மற்றும் ஏராளமான கழக தோழர்கள் பங்கேற்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் 103—வது பிறந்த நாளை முன்னிட்டு

# 131 ‘அ’ வட்டத்தில் மாணவர்களுக்கு பரிசு வழங்கும் விழா!

## வட்டச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி அறிக்கை!

சென்னை, ஆக.8- சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி 131 ‘அ’ வட்டச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8வது நினைவு தினத்தினை முன்னிட்டு படப்பையில் உள்ள அவரது திருஉருவச்சிலைக்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளரும் மாவட்ட ஊராட்சி குழு தலைவருமான படப்பை ஆ.மனோகரன் மாலை அணிவித்து வணங்கினார். உடன் ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், சி.பார்த்தசாரதி, வ.நந்தகோபால், எஸ்.கர்ணன், ஏ.டி.எம்.வினோத், அ.ஜமீர், க.பா.ஆடலரசு மற்றும் தி.மு.க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மாமல்லபுரம் நகர திமுக மற்றும் இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நகர இளைஞர் அணி அமைப்பாளர் – நகர மன்ற உறுப்பினர் மாமல்லபுரம் மோகன்குமார் விஸ்வநாதன் எம்.சி., தலைமையில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. உடன் நகர மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்தநாளையொட்டி நாளை 09.08.2026 ஞாயிறுக்கிழமை காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை அறிஞர் அண்ணா பொது நல மன்றத்தில் எண் 108. என்.எஸ்.கே. சாலை வடபழனி சென்னை 26 ல் மாணவர்களுக்கு ஓவியம் வரைதல், வண்ணம் தீட்டுதல், வினா விடை நிகழ்ச்சி பேச்சுப் போட்டி நடைபெற உள்ளது.

அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த. வேலு மற்றும் பகுதி கழக செயலாளர்கள் கே. ஏழுமலை. கோ. சு. மணி, இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் சீனிவாசன், மோகன்ராஜ், எம்.விஜயகுமார், இரா பொன்னிவளவன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

ஆகவே, வட்ட நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகி கள், மகளிர் அணி சேர்ந்தவர்கள் மற்றும் கழகத்தை சார்ந்தவர்கள் தவறாது கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்புக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

‘மானமிகு சுயமரியாதைக்காரர்’ கலைஞர் நினைவு நாள் சிந்தனை!

# கலைஞர் என்றும் வாழ்கிறார் - தத்துவங்களாய்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி புகழஞ்சலி!

சென்னை, ஆக.8-

கலைஞர் என்றும் வாழ்கிறார் - தத்துவங்களாய்! வருக அவர் விரும்பிய சுயமரியாதைச் சுக வாழ்வு, சமத்துவம் என்று ‘மானமிகு சுயமரியாதைக்காரர்’ கலைஞரது நினைவு நாள் சிந்தனையாக திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:

நேற்று (7.8.2026) திராவிட இயக்கத்தின் “மானமிகு சுயமரியாதைக்காரன்” என்று தன்னை ஒரு வரி விமர்சனத்திற்குள் அடக்கி, பதிலளித்த வித்தகர் முத்தமிழறிஞர் கலைஞர் மறைந்து (2018) 8 ஆண்டுகள் ஆகிவிட்டன.

### புத்தம் புதிய விளைச்சலைத் தரும் வீரிய விதையாகவே விதைக்கப்பட்டிருக்கிறார்!

கலைஞர் என்ற உடல் வேண்டுமானால் அண்ணாவிற்குப் பக்கத்தில் புதைக்கப்பட்டிருக்கலாமே தவிர, மற்றபடி, திராவிட இன எழுச்சி, பெரியார், அண்ணா பாதையில் - நித்தம் நித்தம் புத்தம் புதிய விளைச்சலைத் தரும் வீரிய விதையாகவே விதைக்கப்பட்டிருக்கிறார்!

தனது இறுதி முடிவு எய்தும் வரை, தந்தை பெரியார், அறிஞர் அண்ணா போலவே, காலத்தை வென்ற ஈரோட்டுக் குருகுலத்தின் தேரோட்டியாகவே பகுத்தறிவுக் கொள்கைக்கலனாய், கலையின் கருவூலமாய், லட்சியம், கொள்கைகளைத் தனது எழுத்து, பேச்சு, ஆளுமை ஆற்றல்கள், பரப்புரைப் பயணங்களால் செம்மையாக்கியத் தனி வரலாற்றைப் படைத்த ஒப்பற்றத் தனித்தன்மையாளர் கலைஞர்!

### கலைஞர் என்றும் வாழ்கிறார் – தத்துவங்களாய்!

“பதவிச் செங்கோல் என்னிடம் வந்து போகலாம்; ஆனால், எனது நாவையும், பேனாவையும் என்னிடமிருந்து எவராலும் பறிக்க முடியாது” என்று தனக்கு ஏற்பட்ட சோதனைகளை எதிர்கொண்டு, நெருப்பாற்றில் நீந்தி, புது வரலாற்றுப் பாடத்தை அடுத்த தலைமுறைகளுக்கும் கற்றுத்தந்த ஒரு பல்கலைக் கழகம் அவர். அவரால் செதுக்கப்பட்ட இன்றைய தி.மு.க. தலைவர், ‘திராவிட மாடலின்’ சமூக நீதிக்கான சரித்திர நாயகர் மானமிகு மு.க. ஸ்டாலினின் தலைமை, தற்போது ஏற்படும் சோதனைகளையும் வென்று, மலையென வரும் இன்னல்கள், அடக்குமுறைகள் பனியெனக் கரைந்து போகக்கூடிய அமைதியான அணுகுமுறையின் செயல்வடிவம்!

எனவே, கலைஞர் என்றும் வாழ்கிறார் - தத்துவங்களாய்!

வாழ்க கலைஞர்!

வருக அவர் விரும்பிய சுயமரியாதைச் சுக வாழ்வு, சமத்துவம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 அ வட்டத்தின் சார்பில் விநாயகபுரம் திருவள்ளுவர் சிலை அருகில் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாலையிட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் அவைத் தலைவர் இ.ராமன், வட்ட செயலாளர் டி.சுந்தரம், சக்கரபாணி, பரமேஸ்வரி, கே.நரேந்திரன், எம்.சீனிவாசன், எஸ்.என். ராஜு, அபிப்ரகுமான், கௌதமன், பி.எஸ்.என்.எல். குமார், எஸ்பி கண்ணன், ஏ.வி.முருகன், கவி பிரியா, தயாளன், உமா மகேஸ்வரி, மோகனப்பிரியா, வெற்றிவேல், விக்னேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சு.பெ. நீலகண்டன்

### ஆகஸ்ட் 8 (1999)



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு, இளமைக் காலம் முதல் கழகத்தில் உறுப்பினராகி, ஆழ்வார்பேட்டை பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**நான்கு முறை வட்டக் கழகச் செயலாளராகவும், வட்ட அவைத்தலைவர், மாவட்ட பிரதிநிதி ஆகிய பொறுப்பு வகித்தவர்.**

**1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**இந்தி ஆதிக்க எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, இலங்கை தமிழர் ஆதரவு என கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**